# இயல் 6.11 - சுற்றளவு மற்றும் பரப்பளவு

பயிற்சி எண் :: 6.11.1.1.G

சுற்றளவு - வடிவங்களின் சுற்றளவு - பயிற்சி

## சுற்றளவு - வடிவங்களின் சுற்றளவு - பயிற்சி

கவிதா டீச்சர் அவருடைய 6-ம் வகுப்பு மாணவர்களுக்கு
ஒரு வினோதமான கணக்கைக் கொடுத்தார். அது பின்வருமாறு.

1. மாணவர்கள் ஒரே நீளமுள்ள 3 வெவ்வேறு நூல்களைக்கொண்டு ① ஒரு சதுரம் ② ஒரு செவ்வகம் மற்றும் ③ ஒரு சமபக்க முக்கோணம் அமைக்க வேண்டும்.
2. இம்மூன்று வடிவங்களின் ஒவ்வொரு அளவுகளும் இயல் எண்களாக அமைய வேண்டும். எனில் அந்த நூலின் குறைந்தபட்ச நீளம் என்ன?
3. விடையை செ.மீ-ல் கூறுக.

கவிதா டீச்சரின் மாணவர்களுக்கு இந்த கணக்கின் விடையைக் கண்டுபிடிக்க உங்களால் உதவ இயலுமா?

சதுரத்தின் சுற்றளவு காணும் சூத்திரம் $\Rightarrow$ $4 \times$ ஒரு பக்கத்தின் நீளம்

செவ்வகத்தின் சுற்றளவு காணும் சூத்திரம் $\Rightarrow$ $2 \times$ (நீளம் + அகலம்)

சமபக்க முக்கோணத்தின் சுற்றளவு காணும் சூத்திரம் $\Rightarrow$ $3 \times$ ஒரு பக்கத்தின் நீளம்

கொடுக்கப்பட்டுள்ள மூன்று வடிவங்களில் மாறிலிகளாக வரும் எண்கள் முறையே 4, 2 மற்றும் 3 ஆகும். இவ்வெண்களின் மீ.சி.ம வைக்கண்டுபிடித்தால் இந்த கணக்கின் விடை கிடைத்துவிடும். $\Rightarrow$ மீ.சி.ம(4,2,3) = $4 \times 3$

விடை = **12**

12 செ.மீ நீளமுள்ள ஒரு நூலைக்கொண்டு நாம் கேட்கப்பட்டுள்ள மூன்று வடிவங்களையும் அமைக்கலாம். ① 3 செ.மீ பக்க அளவுள்ள சதுரம். ② 5 செ.மீ நீளமும் 1 செ.மீ அகலமும் (அல்லது) 4 செ.மீ நீளமும் 2 செ.மீ அகலமும் உள்ள செவ்வகம். ③ 4 செ.மீ பக்க அளவுள்ள சமபக்க முக்கோணம்.


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Monday 21st March, 2022 :: 12:19 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

**V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.**
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**